# யாழ் / கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
# (ஸ்ரான்லிக் கல்லூரி)

## வருடாந்த பொதுக்கூட்டம்
## 2014

### கணக்கறிக்கை

### செயலாளர் அறிக்கை

காலம்:- 2014.04.06

இடம்:- பாடசாலை பிரதான மண்டபம்

நேரம்:- 10.00 மணிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் / கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
# (ஸ்ரான்லிக் கல்லூரி)
# பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுச் சபைக் கூட்டம்
# 2014

பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் பாடசாலை பிரதான மண்டபத்தில் 2014.04.06 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு தலைவர் திரு க.ஜெயபாலசிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெறும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம்

## நிகழ்ச்சி நிரல்

- இறைவணக்கம்
- வரவேற்புரை
- தலைமையுரை
- சென்ற வருடக் கூட்ட அறிக்கையும் செயற்பாட்டு அறிக்கையும் (செயலாளர்)
- கணக்கறிக்கை (பொருளாளர்)
- அதிபர் உரை
- உறுப்பினர் கருத்துரைகள்
- புதிய செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு
- புதிய செயற்திட்டங்களுக்கான பொதுச் சபையின் அங்கீகாரம்
- நிறைவுரை (புதிய செயலாளர்)

அனைத்து அங்கத்தவர்களையும் இக் கூட்டத்திற்கு தவறாது சமூகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி இலக்கம் : 077 364 8193

கதிரவேலு ஜெயபாலசிங்கம்
தலைவர்

கணேசன் கம்ஸநாதன்
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் /கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (ஸ்ரான்லிக் கல்லூரி)

## பழைய மாணவர் சங்கத்தின் 2013 ஆம் ஆண்டிற்கான பொதுச் சபை கூட்டத்தின் அறிக்கையின் சுருக்கம்

திரு எஸ்.விஜயகாந் (தலைவர்) அவர்களின் தலைமையில் 2013.01.20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் வருடாந்த பொதுச்சபை கூட்டம் நடைபெற்றுள்ளது.

**இறைவணக்கம்:** திருமதி கோ.ஜெகானந்தராசா அவர்களின் தேவாரத்துடன் இறைவணக்க நிகழ்வு நடைபெற்றது.

**வரவேற்புரை :** அனைவரையும் வரவேற்று வரவேற்புரையை செயலாளர் திரு கணேசன் கம்ஸநாதன் அவர்கள் நிகழ்த்தினார்.

**தலைமையுரை :** பாடசாலையின் புகழ், பெருமைகள் என்பவற்றை விபரித்ததுடன், பல புதிய அங்கத்தவர்கள் வருகை தந்துள்ளது மகிழ்ச்சியாக உள்ளது எனவும் பாடசாலையின் வளர்ச்சிக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என கோரினார்.

**பொதுச் சபை கூட்ட குறிப்பும் செயற்பாட்டு அறிக்கையும் :** இவ்விரு அறிக்கைகளும் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளதனடிப்படையில் திரு கணேசன் கம்ஸநாதன் அவர்கள் சபைக்கு சமர்ப்பித்தார். இவ்விரு அறிக்கைகளும் சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**கணக்கறிக்கை:** திரு து.கௌரிபாலன் அவர்களினால் முன் வைக்கப்பட்டது. இதன் அறிக்கை அனைவருக்கும் அச்சிட்டு வழங்கப்பட்டிருந்தது. அதனை வாசித்தார். சபையினரின் சந்தேகங்கள், கேள்விகளுக்கு விடையளிக்கப்பட்ட பின்னர் சபையினரால் ஏகமனதாக கணக்கறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**அதிபர் உரை (திரு செல்லையா இளங்கோ) :** யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் எனவும் தான் 25 வருட ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையுடன் 04 வருட அதிபர் சேவையையும் நிறைவு செய்துள்ள துடன், 13 வருட கால சேவை ஆற்ற வேண்டிய நிலையிலுள்ளேன் என தன்னை அறிமுகம் செய்து கொண்டார். காலை 6.00 மணி தொடக்கம் மாலை 7.00 மணி வரை பாடசாலைக்காக செயற்படுவதற்கு அக்கறை கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

அதிபர் அலுவலக கட்டடங்கள் திருத்துதல், பகுதி தலைவர்கள் நியமித்துள்ளதுடன் அலுவலகம் ஒதுக்கீடு செய்தல், பிரதி அதிபருக்கு அலுவலகம் ஒதுக்குதல், மாணவர்களுக்கு 08 பாட வேளையும் நடாத்துவதை உறுதி செய்தல், மாணவர்கள் பாடசாலை நேரத்தில் அநாவசியமான முறையில் பாடசாலை வளாகத்தில் திரிவதை கட்டுப்படுத்து வதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மாணவர்களின் குடிநீர் வசதிகளை ஏற்படுத்தல் இதனடிப்படையில் 05 நீர் குழாய்கள் கொண்ட 03 தொகுதிகள் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் நான் பாடசாலையை பொறுப்பேற்றவுடன் நிறைவேற்றியுள்ள செயற்திட்டங்களாகும் என பல்வேறு செயற்பாடுகள் பற்றி விரிவாக விளக்கினார்.

எதிர்வரும் காலங்களில் தேவைப்படும் பௌதீக. மனித வள தேவைப்பாடுகள் பற்றி விபரித்தார்.. சரஸ்வதி சிலை ஒன்றை அமைக்க வேண்டும். பிரதான மண்டபத்தை பாதுகாப்புடன் புனரமைத்தல், மாபெரும் கிரிக்கட் போட்டி ஒன்றை நடாத்துதல், ஆண் பெண் விடுதிக் கான விடுதி மேற்பார்வையாளர்களை நியமித்து அவர்களு க்கான வேதனம் வழங்க வேண்டிய நிலைமைகள் உள்ளது என பல பாடசாலை தேவைகளை பற்றி விபரித்தார்.

**உறுப்பினர்களின் கருத்துரைகள் :**

திரு அ.உபயசேகரம் : அதிபருடன் இணைந்து செயலாற்ற வேண்டும். நேரிய எண்ணங்களுடன் செயற்பட வேண்டும். தலைவராக இருப்பவர் வயதில் மூத்தவராக இருப்பது நல்லது. நல்லதொரு நிர்வாக சபையை தெரிவு செய்ய வேண்டும். பழைய மாணவனாக இருந்து இப்பாடசாலைக்கு கால் நூற்றாண்டு காலம் உழைத்து ஓய்வு பெற்றுள்ளேன் என விளக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாநிதி எஸ்.மோகனதாஸ் :** அழைப்பு கடிதமும், கூட்ட குறிப்பும் கிடைத்தவுடன் நான் இக்கூட்டத்திற்கு வருகை தர வேண்டும் என்ற எண்ணமாகும். எனது பாடசாலை, எனது ஊர், நான் விளையாடிய மைதானம், என எண்ணும் போது அதில் சந்தோசம் காணவேண்டும். எமது பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்களை காணும் போது சந்தோசமடைகின்றேன். பழைய மாணவர் சங்கம் சிறப்பாக செயற்படுவதற்கு நல்லதொரு நிர்வாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்வோம். என குறிப்பிட்டார்.

**திரு எஸ்.ரி.பத்மநாதன் :** நாங்கள் பொது அமைப்புகளில் அங்கம் வகித்து கிடைக்கின்றவை பதவியல்ல அவை பொறுப்புகள் என்றே கூற வேண்டும். எனவே நாங்கள் அவ்வாறான பொறுப்புகளை நிறைவேற்று வதற்கு சரியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் பொறுப்பு களுடன் செயற்படக் கூடிய நிர்வாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்ய வேண்டும் என குறிப்பிட்டார்.

**திரு செ.ஜீவானந்தம் :** இந்த பாடசாலை வறியவர்களுக்கு கல்வி கொடுத்த பாடசாலை என்பதுடன் நான் பழைய மாணவர்களின் எல்லா நிகழ்வுகளுக்கும் வருகின்றேன். இப்பாடசாலையில் கல்வி கற்ற பலர் பிரபல்யமானவராக திகழ்கின்றார்கள். எனவே நாங்கள் எதிர்காலத்தில் இதன் பெருமையை புகழை மரபுகளை பாதுகாக்க வேண்டும். எனக் குறிப்பிட்டார்.

**திரு த.தர்மரட்ணம் :** கலாநிதி எஸ் மோகனதாஸ் அவர்கள் தலைவராக இருந்த காலத்தில் நிர்வாக உறுப்பினராக இருந்துள்ளேன். நாங்கள் அனைவரும் அதிபருக்கு உறுதுணையாக இருந்து அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும். என வலியுறுத்தி கூறினார்

**திரு.க.நாகேந்திரம் :** 12 உறுப்பினர்கள் பதவி விலகியதாக குறிப்பிடப் பட்டிருப்பினும் அதுபற்றிய விளக்கங்களுக்கான பல்வேறுபட்ட வினாக்களை தொடுத்தார். சபையால் அறிக்கை அங்கீகரிக்கப்பட்ட பின்னர் இவ்வாறான கருத்துகள் பொருத்தமற்றது என சபை ஏகமனதாக நிராகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு க.வே.சிவகுமார் :** கலாசார போட்டிகளில் எங்களை வெல்வதற்கு யாருமில்லை என்ற காலங்கள் இருந்தது. கொக்கி தெரியாத காலத்தில் கொக்கி அணி உருவாக்கி பல களங்கள் கண்டு பல வெற்றிகளை பெற்றுள்ளோம் எனினும் தற்போது பின்னடைவை சந்தித்துள்ளோம் பழைய நிலையை அடைய வேண்டும். என குறிப்பிட்டார்.

**திரு து.கௌரிபாலன் :** விளையாட்டுக்கு பொறுப்பான ஆசிரியர் என்ற வகையில் விளையாட்டுக்காக பிற மாவட்டங்களுக்கு செல்லுகின்ற செலவுகள் மீளளிப்பு செய்ய வேண்டும், மாபெரும் கிரிக்கட் போட்டியை நடாத்துவதற்கு உதவி செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தார்

**திரு எஸ்.விஜயகாந் :** இன்று கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் பழைய மாணவர்கள் பலர் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக் கின்றார்கள். அவர்கள் கூட்டத்தை அலட்சியப்படுத்தியுள்ளார்கள். அனைத்து பழைய மாணவர்களும் இச் சங்கத்தின் அங்கத்துவத்தை பெற வேண்டும் என குறிப்பிட்டார்.

**தற்காலிகத்தலைவர் தெரிவு :** தற்காலிக தலைவராக திரு எஸ்.ரி பத்மநாதன் அவர்கள் சபையால் தெரிவு செய்யப்பட்டு, புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்வதற்குரிய பொறுப்பினை ஏற்றுக் கொண்டார்.

இதனடிப்படையில் கீழ் குறிப்பிட்ட நிர்வாக சபை உறுப்பினர்கள் பொதுச் சபையால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| 1. | திரு.க.கம்ஸநாதன் | செயலாளர் |
| 2. | திரு.க.ஜெயபாலசிங்கம் | தலைவர் |
| 3. | திரு.கி.செல்வராசா | பொருளாளர் |
| 4. | திரு.எஸ்.விஜயகாந் | சிரேஸ்ட உப தலைவர் |
| 5. | திரு.த.தர்மரட்ணம் | உப தலைவர் |
| 6. | திரு.எஸ்.சி.செல்வராசா | உப தலைவர் |
| 7. | திரு.ஐ.தர்மகுலசிங்கம் | உப தலைவர் |
| 8. | திரு.கா.ஜெயராஜசிங்கம் | உப செயலாளர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. திரு.ஏ.என். செல்வராசா உறுப்பினர்
10. செல்வி இ.கமலவேணி உறுப்பினர்
11. திருமதி சி.விமலராணி உறுப்பினர்
12. திருமதி நா.பூபதி உறுப்பினர்
13. திருமதி கோ.ஜெகானந்தராசா உறுப்பினர்
14. திரு மு.வெஸ்லிபாலா உறுப்பினர்
15. திரு.எஸ்.குகதாசன் உறுப்பினர்
16. திரு.சொ.மன்மதராஜலிங்கம் உறுப்பினர்
17. திரு.க.வே.சிவகுமாரன் உறுப்பினர்
18. திரு.பா.பாலவரதன் உறுப்பினர்
19. திரு.ஆர்.கேதீஸ்வரன் உறுப்பினர்
20. திரு க.நாகேந்திரம் உறுப்பினர்
21. திருமதி ர.துரைரட்ணம் உறுப்பினர்

**போசகராக தெரிவு செய்யப்பட்டவர்கள்**

1. திரு எஸ்.ரி.பத்மநாதன்
2. திரு செ.இளங்கோ (பதவி வழியாக தெரிவு அதிபர்)

**நிகழ்வாண்டிற்கான செயற்திட்ட முன்மொழிவு**

1. பாடசாலை கல்வி மேம்பாட்டிற்கு தேவையான உதவிகளையும் ஒத்தாசைகளையும் அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக வழங்குதல்
2. விளையாட்டு துறை வளர்ச்சிக்கு உதவுதல் அதாவது மாபெரும் கிரிக்கட் போட்டிகளை நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல். கிரிக்கட் பெறுபேற்று கட்டடத்தை அமைத்தல்
3. பௌதீக வளங்களை பெற்றுக் கொள்ளும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
4. புதிய அங்கத்தவர்களை இணைத்து சங்கத்தின் செயற்திறனை அதிகரித்தல்
5. பழைய மாணவர்கள் செறிவாக உள்ள நாடுகளில் பழைய மாணவர் சங்கத்தின் கிளைகளை ஸ்தாபித்தல்
6. பழைய மாணவர்கள் சங்க கிளைகளுடன் தொடர்புகளை வலுவடையச் செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. கிரிக்கட் பெறுபேறுகள் கட்டடத்திற்கு நன்கொடையாளரின் பெயரை சூட்டல்
2. வங்கியின் கையொப்பதாரர்களை மாற்றுதல்
3. மாபெரும் கிரிக்கட் போட்டியை நடாத்துவதற்கு அங்கீகரம் வழங்குதல்
4. பொருளாளரின் முற்பணம் ரூபா 60,000.00 (அறுபதாயிரம்) வை மீளளிப்பு செய்தல்
5. பொதுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்வாண்டு செயற்திட்ட முன்மொழிவை நடைமுறைப்படுத்தல்

**கணேசன் கம்ஸநாதன்**
**செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்**
**யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் /கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
## (ஸ்ரான்லிக் கல்லூரி)
## பழைய மாணவர் சங்கத்தின் செயலறிக்கை
## [2013.01.20 -2014.04.05]
## வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் - 2014.04.06

### 1.0 முன்னுரை

எமது பாடசாலையின் அத்தியாவசிய தேவைகளை அதிபரின் உறுதுணையுடனும், பழைய மாணவர்களின் நிதிப்பங்களிப்புடனும் நிர்வாக சபையின் ஒத்திசைவுடனும் கடந்த ஒரு வருட காலமாக எங்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களை பொதுச் சபையின் கவனத்திற்கு கொண்டு வருவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

### 2.0 செயற்பாடுகள்

2.1 10 நிர்வாக சபை கூட்டங்கள் கூடப்பட்டிருப்பினும் கோரமில்லாது 03 கூட்டங்கள் நடாத்த முடியவில்லை. அத்துடன் மூன்று விசேட கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

2.2 துடுப்பாட்ட போட்டி பெறுபேற்று தகவல் கட்டடம் அமைத்தல் செயற்திட்டத்திற்காக திருமதி S.பாலசிங்கம் அவர்கள் ரூபா 100,000.00 வை நன்கொடையாக வழங்கியுள்ளார் எனினும் அதற்கான மொத்த செலவாக ரூபா 311200.50 செலவு ஏற்பட்டது இதற்கான மிகுதியான செலவுத் தொகையை லண்டன் கிளை மீளளிப்பு செய்துள்ளது.

2.3 எமது பாடசாலைக்கும் முல்/ வித்தியானந்தா கல்லூரிக்கும் இடையிலான மாபெரும் துடுப்பாட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டி 03.05.2013, 04.05.2013 ஆகிய திகதிகளில் நடைபெற்றுள்ளன. முற்று முழுதாக நோர்வேயிலுள்ள பழைய மாணவர் சங்க கிளை நிதியளிப்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது இவர்கள் ரூபா 181413.25 வை வழங்கியுள்ளனர்.

2.4 துடுப்பாட்ட போட்டியை நடாத்தும் வகையில் எமது பாடசாலை மைதானத்தை ஸ்ரான்லி விளையாட்டு கழகத்தினர் துப்பரவு செய்து தந்துள்ளார்கள்.

2.5 இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு .வே.ஞானகாந்தன் அதிபர் உட்பட 18 ஆசிரியர்களை கௌரவிக்கும் வகையில் பாடசாலையுடன் இணைந்து பழைய மாணவர்கள் சங்கமும் அதிபருக்கு தங்கப்பதக்கமும், ஆசிரியர்களின் சேவையடிப்படையில் பொன்னாடையும், நினைவுச் சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

2.6 பழைய மாணவர் சங்க நோர்வே கிளையின் விளையாட்டு பொறுப்பாளர் இலங்கைக்கு வருகை தந்த போது அவருடனான தேனீர் விருந்து ஒன்றை ஏற்பாடு செய்ததுடன், அதில் எமது பாடசாலை துடுப்பாட்ட வீரர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

2.7 பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் கால்பந்து போட்டிக்கான கோல்காப்பு கம்பம் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.8 திரு ஐ.தர்மகுலசிங்கம் அவர்களினால் வழங்கப்பட்ட ரூபா 55000.00 நன்கொடையிலிருந்து கொக்கி காப்பாளருக்கான சீருடைகள் பெற்றுக் கொடுக்கப் பட்டுள்ளன.

2.9 பாடசாலை நிர்வாகத்துடன் இணைந்து தற்பொழுது 120 மாணவர்களுக்கான விடுதி நடவடிக்கைகளை செய்வதுடன் அதற்கான நிதி உதவிகளை தொடர்ச்சி யாக லண்டன் கிளையிடமிருந்து பெற்று கொடுக்கப் பட்டுள்ளன.

2.10ஓய்வு பெற்ற உப அதிபர் திரு உபயசேகரம் அவர்களினால் வழங்கப்பட்ட ரூபா 45000.00 நிதி கொண்டு மேடையின் முன்பகுதி சீர்செய்யப்பட்டுள்ளமை

2.11லண்டன் பழைய மாணவர் கிளைச் சங்கத்தின் அனுசரணையுடன் 321500.00 செலவில் விடுதி மாணவர்களுக்கான குளியலறை கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளது.

2.12பழைய மாணவராகவும், முன்னர் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகவும் இருந்த திரு சீ.வி.கே. சிவஞானம் அவர்கள் வடமாகாண சபை பேரவை தலைவராக மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளமையை கௌரவிக்கும் முகமாக பழைய மாணவர் சங்கத்தினால் தேனீர் விருந்து ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.13 வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி, பரிசளிப்பு விழா,ஆசிரியர் தினவிழா, உயர் தர மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வுகள் என பாடசாலையின் அனைத்து நிகழ்வுகளிலும் பங்காற்றியதுடன் எமது சங்கத்தினால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட நிதிகளும் வழங்கப் பட்டுள்ளன.

2.14 நிதி அறிக்கைகள் பொருளாளரினால் முறையாக பேணப்பட்டு வருவதுடன், இவ் அறிக்கையினை கணக்காய்வாளர் ஒருவர் மூலமாக முறையாக செவ்வை பார்க்கப்பட்டுள்ளது.

**கணேசன் கம்ஸநாதன்**
**செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்**
**யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்**
**2014.04.06**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் /கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (ஸ்ரான்லிக் கல்லூரி) பழைய மாணவர் சங்கத்தின் நிகழ்வாண்டிற்கான செயற்திட்ட முன்மொழிவுகள்

**1.0 முன்னுரை**

எமது பாடசாலை கடந்த இருவருடங்களில் பல்வேறு துறைகளில் அதீத வளர்ச்சியடைந்து வருவதை நாங்கள் அனைவரும் உணர்ந்துள்ளோம். எமது பாடசாலை ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவை அத்துடன் அதிபரின் மதிநுட்பமான திட்டமிடல் செயற்பாடுகளினால் மாணவர் சேர்வு வீதம், பாடசாலையின் கற்றல் செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் அடைந்துள்ளமை, மாணவர்களின் ஒழுக்கம் என பல்வேறு வகையான செயற்பாடுகளில் கடந்த இரு வருடங்களில் அதிக முன்னேற்றம் கண்டுள்ளது எனவே எமது பாடசாலையின் பல்வேறுபட்ட தேவைகளில் ஒரு சில தேவைகளையாவது பழைய மாணவர் சங்கம் மேற்கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்புக்கள் உள்ளதால் கீழ் குறிப்பிட்ட செயற்திட்டங்களை நிர்வாக சபையின் விதப்புரைகளுடன் நாங்கள் முன்மொழிகின்றோம். அதற்கான அங்கீகாரத்தை வழங்குமாறு கோருகின்றோம்

2.0 எமது நிர்வாக சபை கூட்டம் 2014.03.03 ஆம் திகதியன்று நடைபெற்ற போது கீழ் குறிப்பிட்ட செயற்திட்டங்கள் முன்வைக்கப்பட்டது

2.1 புதிய உறுப்பினர் 500 பேரை சங்கத்தில் இணைத்துக் கொள்ளல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.2 பாடசாலையின் பிரதான மண்டபத்தை சீர் செய்தல் அல்லது புதிதாக அமைத்தல்

2.3 கொக்கி விளையாட்டுக்களுக்கான உபகரணங்களை பெற்றுக் கொடுத்தல். கோல் காப்பு கம்பம் அமைத்தல்

2.4 பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியொன்றை ஒழுங்கு செய்து போட்டிக்கான பயிற்சிகளை வழங்கு வதற்கு உதவுதல் ஆடுகளம் சீர்செய்தல்

2.5 துடுப்பாட்ட விளம்பரப்பலகையை முழுமையாக பூர்த்தி செய்தல்

2.6 துடுப்பாட்ட அணிக்கு பயிற்சியளிப்பதற்குரிய நிதியை பெற்றுக் கொடுத்தல்

2.7 அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதற்கு கீழ் குறிப்பிட்ட குழுக்களை அமைத்தல்

- கல்விக் குழு
- சுகாதாரக் குழு
- விளையாட்டுக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
### (ஸ்ரான்லிக் கல்லூரி) பழைய மாணவர் சங்கம்
### வருடாந்தப் பொதுக் கூட்டம் - 2014
### 01.01.2013 -- 31.12.2013 வரையான காலப்பகுதிக்கான நிதி அறிக்கை

| கொள்ளல் | ரூபா | சதம் | கொடுத்தல் | ரூபா | சதம் |
|---|---|---|---|---|---|
| ஆரம்பக் காசு மீதி | 10773 | 00 | பொருளாளர் முற்பணம் மீளளிப்பு | 60000 | 00 |
| சேமிப்பு வைப்பு மீதி (NSB) | 502684 | 99 | வருடாந்த பொதுக்கூட்ட பத்திரிகை விளம்பரம் | 4704 | 00 |
| நிலையான வைப்பு மீதி (NSB) | 504038 | 36 | வருடாந்த பொதுக்கூட்ட அழைப்புச் செலவு | 3300 | 00 |
| நடைமுறைக் க/கு மீதி (BOC) | 9428 | 32 | வருடாந்த பொதுக்கூட்ட தேனீர்,சிற்றுண்டி,மதியபோசனம் | 19251 | 00 |
| பொதுக்கூட்ட மதிய போசனம் வரவு | 6500 | 00 | புதிய அதிபர் வரவேற்பு விளம்பரம் | 4352 | 00 |
| ஆயுள் சந்தா வரவு | 7000 | 00 | அதிபர் அலுவலக திருத்தம் | 100000 | 00 |
| ஸ்கோர் போட் அமைத்தல் வரவு – லண்டன் | 105150 | 00 | பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி | 10000 | 00 |
| யா/க.ம.ம.வி VS மு/வித்தியானந்தாக் கல்லூரிகளுக்கிடையிலான துடுப்பாட்டப் போட்டிக்கான வரவு – நோர்வே | 181413 | 25 | திரு.வே.ஞானகாந்தன்(அதிபர்) மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 19 ஆசிரியர்கள் பிரிவுபசாரம், தங்கமெடல் | 43025 | 00 |
| விடுதிக்கான வரவு ப.மா.ச. லண்டன் (01.01.2013-31.12.2013) | 1727414 | 00 | ஸ்கோர்போட் அமைத்தல் | 311200 | 00 |
| விடுதி குளியலறைக்கான வரவு – லண்டன் | 487420 | 00 | பாடசாலைக்கு 2 புதிய இரும்புக் கேற் செய்தமை | 21350 | 00 |
| தலைவர் முற்பணம் | 117734 | 00 | விக்மச் கொடுப்பனவு | 180000 | 00 |
| வங்கி வட்டி வருமானம் | 64905 | 40 | தமிழ்த் தினம் | 5000 | 00 |
| | | | உலக ஆசிரியர்தினம் | 10000 | 00 |
| | | | விக்மச் அனுசரணையாளர் கௌரவிப்பு | 2830 | 00 |
| | | | திருச்செல்வி கே.சிவகுமாரன் (முன்னாள் தலைவர் ப.மா.ச) கௌரவிப்பு | 6200 | 00 |
| | | | விடுதிக்கான கொடுப்பனவு | 1351615 | 00 |
| | | | மைதான பின்மதில் கட்டியமை | 119500 | 00 |
| | | | மைதான வேலி அடைத்தமை | 5000 | 00 |
| | | | விக்மச் துடுப்பாட்டபோட்டி விளம்பரப் பலகை பூட்டியது | 8000 | 00 |
| | | | ப.மா.ச. றுபர்ஸ்ரெம் செய்தமை | 1000 | 00 |
| | | | தலைவர் முற்பணம் மீளளிப்பு | 105000 | 00 |
| | | | விடுதி குளியலறைக்கான கொடுப்பனவு | 321500 | 00 |
| | | | உதைப்பந்தாட்ட கோல்கம்பம் | 37900 | 00 |
| | | | காசோலைப்புத்தகம் | 750 | 00 |
| | | | தலைவர் முற்பணம் | 80000 | 00 |
| | | | செயலாளர் செயற்பாட்டுக்கொடுப்பனவு | 3000 | 00 |
| | | | இறுதி காசு மீதி | 145 | 00 |
| | | | சேமிப்பு வைப்பு மீதி (NSB) | 47590 | 39 |
| | | | நிலையான வைப்பு மீதி (NSB) | 504038 | 36 |
| | | | நடைமுறைக் க/கு மீதி (BOC) | 358210 | 57 |
| | 3724461 | 32 | | 3724461 | 32 |

2013 ம் ஆண்டிற்கான கணக்கறிக்கை பரிசீலிக்கப்பட்டு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.

திரு.க.ஜெயபாலசிங்கம்
தலைவர்

திரு.எஸ்.சிவராஜா
கௌரவ கணக்காய்வாளர்

திரு.கி.செல்வராசா
பொருளாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் / கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

(ஸ்ரான்லிக் கல்லூரி)




சேரல்: திருத்தம்பி ........ வா.மகேசன்

........ கோண்டாவில் மேற்கு ........

........ கோண்டாவில் ........

..........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org